உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.


| | | |
|---|---|---|
| ஆண்டு எ | பலவான்குடி-ஸ்ரீமுக-கார்த்திகை | திங்கள் ச. |


உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ளடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## தமிழன்பர் மகாநாடு.

தெய்வச் செந்தமிழ் செழித்தினி தோங்கச் சென்னைமா நகர்க்கண் பச்சையப்ப முதலியார் கலாசாலை மண்டபத்தில் 1933–டிசம்பர்—23, 24உ களிற் கூடப்பெறுமெனப் பத்திரிகைகள் எங்கும் பரவியுள்ளன.

திவான்பகதூர் டாக்ட்டர் கனம் ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள் மகாநாட்டைத் திறந்துவைக்கவும், சென்னைக் கல்வியிலாகா மந்திரி மகா-ள-ள-ஸ்ரீ திவான்பகதூர் எஸ். குமாரசாமி ரெட்டியாரவர்கள் தலைமைவகிக்கவும் உவந்துள்ளார்கள் என்பது, மகாநாடு மிகச் சீரும் சிறப்புமாக நடைபெறுவதற்கு அறிகுறியே யாகும்.

தமிழ்நாட்டிற் பிறந்த ஒவ்வொருவரும் தங்கள் நாட்டுக்குத் தாய்மொழியாகிய தமிழ்மொழியே இன்றியமையாத தென்பதையும், மொழிவளர்ச்சியினாற்றான் நாடு முன்னேற்றம் அடையக்கூடு மென்பதையும் உறுதியாய்க்கொண்டு, தங்களின் மூலப்பொருளாகிய தமிழ்மொழியை யிழந்துவிடாது காப்பாற்றவும் போற்றிவளர்க்கவும் பேரன்புடையராக முன்வருதல் கடனாகும்.

எவ்வாறு காப்பது? எவ்வாறு வளர்ப்பது? என்ற வழிகளை யாய்ந்து, ஒவ்வோரன்பர்களும் தங்கள் தங்கள் கருத்துட் டோன்றியவைகளை மயிலாப்பூரிலுள்ள தமிழன்பர் மகாநாட்டுக் காரியாலயத்துக்கு அனுப்புவிக்கலாம். அறிவு முதிர்ச்சியும் அநுபவ முதிர்ச்

சியும் வாய்ந்த பெரியார்கள் தத்தங் கருத்துக்களை எழுத்துமூலம் ஈண்டுத் தந்து, அவைகளை ஒருசேரத் தொகுத்து மகாநாட்டில் தீர்மானத்துக்குக் கொண்டுவரப் பணித்தாலும், அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு சிறிதும் தயங்காது திருவருள் வயத்தாற் செய்து முடிக்கவும் சித்தமாயிருக்கின்றோம். தயவுகூர்ந்து தெரிவிக்க வேண்டுதும்.

அன்பர்களே! தமிழ்மக்களே! சுதேச பக்தர்களே! சுயராஜ்யம் பெற விரும்பும் தூய்மையாளர்களே! நீங்கள் எல்லீரும் நீள நினைந்து சிந்தித்துத் தெளிந்தால் நாடு நலம் பெறுதற்கு நாட்டு மொழி வளர்ச்சியே முதன்மைக்காரு மென்பதுதானே முடிந்த முடிபாகக் காண்பீர்கள். நாட்டு மொழியைக் கைவிட்டு நாட்டுக்கு என்ன நலத்தைச் செய்யப் போகின்றோம். நம் தாய்நாடாகிய தமிழ்நாடு என்றும் தமிழ்நாடாக நின்று நிலவவும், நன்றி பல உண்டாகவும் தக்கவாறு தாழாதுதவுவீர்களாக!

மகாநாட்டை வளம்பெற நடாத்த மனமுவந்து முன்னிற்கும் பேரன்பர் பலர்க்கும் மனமார்ந்த நன்றி பாராட்டுகின்றோம்.

மகாநாடு மாண்புடன் நடைபெற்று மாநிலமெல்லாம் தமிழ்மொழி பொங்கித்ததும்பி ஊற்றெடுத்துப் பரவும் வண்ணம் சௌந்தர பாண்டியன் என்னும் தமிழ் நாடனைகச் சங்கமிருந்து தமிழாய்ந்த தனிமுதற் கடவுள் தண்ணருள் புரிவாராக!

இம்மகாநாட்டின் சார்பாகத் தமிழ்ப் புத்தகக் காட்சிச்சாலை, சென்னைக் கல்வியிலாகாத் தலைவர் மிஸ்டர் ஏர்லம் ஸ்மித் எம். ஏ. ஐ. இ. எஸ். அவர்களால் திறந்து வைக்கவும், அதுபோழ்து மகாகனம் V. S. ஸ்ரீநிவாசசாஸ்திரியார் பி. ஸி. எச். தலைமை வகிக்கவும், டிசம்பர் 21உ முதல் 26உவரை அக்காட்சியை இனிது நடத்தவும் செய்துள்ள திட்டமும் சாலச் சிறந்ததே.

இம் மகாநாட்டின் வரவேற்புச் சபைத்தலைவர் மகாமகோபாத்தியாய—தாக்ஷிணாத்யகலாநிதி—டாக்டர்—மறைத்திருவாளர் வே. சாமிநாதையரவர்களின் கடிதத்தை இதன் தொடர்பாகச் சேர்த்துள்ளோம். அதனையும் படித்து மகாநாட்டின் அவசியத்தை யுணர்வீர்களாக!

மயிலாப்பூர், சென்னை.
22—10—1933.

அன்புள்ள ஐயா!

தமிழ்ப் பாஷையானது மிகவும் புராதனமானதென்பதும், பல வகைக் கலைகளும் நிரம்பியதென்பதும் முற்காலத்தில் ஒவ்வொரு வகையிலும் பல மேதாவிகள் விளங்கித் தமிழுலகத்திற்குப் பெரும் பயனை அளித்துள்ளார்களென்பதும் தாங்கள் அறிந்தனவே.

பொதுவாக இக்காலத்தில் தமிழறிவு ஜனங்களிடையே பரவி யிருந்தும் பெரும்பான்மையோர் தங்கள் அபிப்பிராயங்களைத் தாய் மொழியிலேயே மனத்துள் நினைக்கவும் நினைத்தவற்றை அம்மொழி யிலேயே பேசவும் எழுதவும் சக்தியற்றிருக்கிறார்களென்பது பல துறைகளிலும் உழைத்து வரும் பெரியோர்களுடைய கருத்து. இதற்குக் காரணம் பாஷையன்று. இன்ன இன்ன வகையில் முயன்றால் தமிழ்மக்களுக்கு இயன்ற அளவு தமிழறிவைப் புகட்டிப் பயனளிக்கலா மென்பதை ஆலோசிப்பதற்காகப் பலவகைப்பட்ட தமிழன்பர்களைக் கலந்துகொள்ள வேண்டுமென்னும் நோக்கத்துடன் ஒரு மகாநாடு, வருகிற டிஸம்பர் மாதத்திலே புஸ்தகாலயப் பிரசார சங்கத்தாரின் பெருமுயற்சியாற் கூட்டப்படுமென்பதை இதற்கு முன்னமே தாங்கள் பத்திரிகைகள் மூலமாக அறிந்திருக்கலாம்.

இந்த மகாநாடு சென்னைப் பச்சையப்ப முதலியார் கலாசாலை மண்டபத்தில் வருகிற டிஸம்பர் மாதம் 23, 24-ஆம் தேதிகளில் நடைபெறும். திவான் பஹதூர் டாக்டர் ராஜா ஸர். அண்ணாமலைச் செட்டியாரவர்கள் மகாநாட்டைத் திறந்துவைக்கவும், சென்னைக் கல்வி மந்திரியான கௌரவம் பொருந்திய மகா-ா-ா-ஸ்ரீ திவான் பஹதூர் எஸ். குமாரசாமி ரெட்டியாரவர்கள் தலைமை வகிக்கவும் மனமுவந்து ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழபிமானமும் உலக அனுபவமுமுள்ள தாங்கள் வேண்டிய ஆதரவை அளித்து அக் காலத்தில் விஜயம்செய்து இம் மகாநாட்டைச் சிறப்பாக நடத்திவைக்கும்படி வரவேற்புச் சபையின் சார்பாக நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தாங்கள் இந்த மகாநாட்டிற் கொண்டுவரவேண்டிய தீர்மானங்கள் எவையேனும் இருப்பின் அவற்றை டிஸம்பர் மாதம் 10-ஆந் தேதிக்கு முன்னதாகவே மகாநாட்டின் காரியாலயத்திற்கு எழுதியனுப்பச் செய்யும்படி விரும்புகிறேன்.

இதுவரையில் இத்தகைய மகாநாடு இந்த ராஜதானியில் நடைபெறவில்லையென்பதை நான் சொல்லவேண்டியதில்லை. பெரும் பொருட்செலவில் இம்மகாநாடு நடைபெறவேண்டியிருத்தலால், தங்களால் இயன்ற பொருளுதவியைச் செய்ய வேண்டுகின்றேன்.

இதன் சம்பந்தமாகத் தாங்கள் செய்யும் உதவிகள் யாவும் தமிழ்வளர்ச்சிக்கு மிக்க ஆதரவாக இருக்கும்.

இங்ஙனம்,

அன்புள்ள

வே. சாமிநாதையர்.

---

உ

# சிவவழிபாடு.

சுதுமலை--அம்மன்கோயில்
சிவஸ்ரீ ச. பொன்னுசுவாமிக் குருக்கள் அவர்கள்.

சிவம் வாக்கு மனோதீத வஸ்து. அதனால், அவரைக் கண்களால் காணமுடியாது; மனத்தினாலும் தியானிக்க இயலாது. கண், மனம் முதலியவை மாயா கருவி கரணங்கள். சிவத்தினியல்பு மாயையில் தோய்வதன்று. அதனால், அவை சிவத்தைக்காணுங் கருவிகளாகா. சிவ சந்நிதானத்தில் இக் கருவி கரணங்கள் ஒளிமுன் னிருள் போல் முனைத்து நில்லா. அதனால், எப்படி ஒளியைக் காண்பதற்கு இருள் துணைப்பொருளாகாதோ அப்படியே சிவத்தைக் காண்பதற்கு மாயா கருவி கரணங்கள் துணைப்பொருளாகா. நினைப்பதற்குந் துணை செய்யா.

இனி, ஒளியைக் காண்பதற்கு ஒளியுடைப் பொருளே சாதனமாகும். அதுபோல, அறிவுருவாய் விளங்கும் சிவத்தை அறிவதற்கு அறிவே சாதனமாகும். அதுபற்றியே வாக்குமனோதீத கோசரமெனப்பட்டது. வாக்கு மனோதீத கோசரமென்றால், வாக்குக்கும் மனதுக்கும் எட்டாததும், அறிவுக்குஎட்டுவதுமானது என்பதுபொருள். வாக்குஎன்பது பாசஞானம். மனம்என்பது பசுஞானம். எனவே, பாசஞான பசுஞானங்களுக்கு எட்டாது சிவஞானத்துக்கு எட்டுவது என்பது அதன்பொருளாம்.

இந்த உலகத்தி லாயினுமாக, மற்றெந்த உலகங்களினுமாகச் சிவத்தைக் கண்ணிந்திரியத்தாற் காணமுடியாது.

அவருக்கு உருவில்லை; வடிவில்லை; உலகில்லை. அதனால், அவரை ஒருருவாகவமைத்து மனத்தினால் சிந்திக்கமுடியாது சிந்திக்க முடியினும் மனத்திற் படுபவரல்லர். அதனால், அப்பொருளை மனத்தினால் தியானிப்போம் என்பதும் வீணாம். மனத்தின் வியாபாரம் பிருதிவிமுதல் சிவதத்துவ மீறான தத்துவங்களினுள்ளும் புவனங்களினுள்ளும் வியாபரிக்கும். அவர் அதிற் றோய்பவ ரல்லர். அதனால் மனோதீதராகின்றார்.

ஆன்மா சேதன வஸ்துவாயினும் தானாக விளங்குதலின்றி, வியஞ்சகத்தால் விளங்கு மியல்பிற்று. கண் ஒளியுடைப் பொருளாயினும், தானாக விளங்குதலின்றி விளக்கொளி, அல்லது சூரியப் பிரகாசம் முதலிய வியஞ்சகப் பொருள்களால் விளங்குதல் போல, ஆன்மாவும் மாயா கருவி கரணங்களால், அல்லது சிவத்தினருளால் விளக்கம்பெறும் இயல்பிற்று. (தொடரும்)

# பத்தினிக் கடவுள்.

கோநகர் திருவாளர் சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார்.

(திங்கள் உ: உ௮-ம் பக்கத் தொடர்ச்சி.)

அப்போது, சிங்கபுரத்துக் கடைவீதியிற் பண்டம் விற்றுக்கொண்டிருந்த சங்கமனென்னும் வணிகனை, அந்நகரத்தரசனிடம் தொழில்செய்து கொண்டிருந்த பரதனென்பவன், பகைவனென்று பிடித்து அரசனுக்குக் காட்டிக் கொலைசெய்து விட்டான். அச்சங்கமன் மனைவியாகிய நீலி என்பவள் மிகத்துயரமுற்று பதினான்கு நாட்கள் பலவிடத் தலைந்து பின்பு உயிர் விட நினைந்தவள்,

> 'எம்முறு துயரஞ் செய்தோர் யாவரும்
> தம்முறு துயரமுற் றாகுக'

எனக் கூறி யிறந்தனள். அப் பரதனே, இப்பொழுது கோவலனாக வந்து பிறந்தான். ஆதலால், நீங்கள் இத்துன்பம் அடைந்தீர்கள். இன்றைக்குப் பதினான்காவது நாள், நீ உன் கணவனைக் கண்டு சேர்வாயெனக் கூறி அவளைத் தேற்றிச்சென்றது. பின்பு கண்ணகி மதுரையைவிட்டு நீங்கிச் சேரநாட்டையடைந்து, 'செங்குன்று' என்னும் மலைமீதேறி ஒரு வேங்கை மரத்து நிழலில் நிற்க, பதினான்கு நாட்கள் சென்றபின்,

> 'பீடுகெழு நங்கை பெரும்பெய ரேத்தி
> வாடா மாமலர் மாரி பெய்தாங்
> கமரர்க் கரசன் றமர்வந் தேத்தக்
> கோநகர் பிழைத்த கோவலன் றன்னொடு
> வான வூர்தி யேறிச்'

சுவர்க்கம் புகுந்தனள்.

இதனைக் கண்குளிரக் கண்ட குறிஞ்சிநில மக்களாகிய வேட்டுவர்கள் அவள்பொருட்டுக் குரவையாடி, அக்காலத்து மலைநாடாண்ட மன்னன் செங்குட்டுவனிடஞ் சென்று, 'அரசே! யாம் வாழும் மலையிலுள்ள வேங்கைமரத்தின்கீழ், ஒருமுலை யிழந்தவளாய்ப் பெருந்துயரொடும் வந்துநின்ற பெண்ணொருத்திக்கு அவள் காதற்கணவனைக் காட்டி, அவளோடு மழைத்துக்கொண்டு எங்கள் கண்முன்பு விண்ணுலகேகினர்' என்று கூறினர். அதுகேட்ட அரசன், அவள் எந்நாட்டாளோ? எவர்மகளோ? என்று ஐயுற்றிருக்குங்கால் அவண்போந்த சீத்தலைச்சாத்தனார் என்னும் புலவர் பெருமானால், அவள் சரிதமெல்லாம் அறிந்து, இங்ஙனம் பாண்டியனுக்கு நேர்ந்ததுன்பத்தைக் கேட்டு வருந்திப் புலவரை நோக்கி,

> 'எம்மோ ரன்ன வேந்தற் குற்ற
> செம்மையி னிகந்தசொற் செவிப்புலப் படாமுன்
> உயிர்பதிப் பெயர்த்தமை யுறுக வீங்கென
> வல்வினை வளைத்த கோலை மன்னவன்
> செல்லுயிர் நீத்துச் செங்கோ லாக்கியது'

என்று கூறித் தன் தேவியை நோக்கிப் பெண்ணே! கணவனுகிய பாண்டியன் உயிர் துறக்கப் பொருளாய், தன்னுயிரையும் நீத்த கோப்பெருந்தேவியோ? அன்றி, நம்நாடுவந்து விண்ணுடெய்திய கண்ணகியோ? இவ்விருவரிற்சிறந்த பத்தினி யாரென வினவ, 'காதலன் றுன்பங் காணது கழிந்த, மாதரோ பெருந்திரு வுறுக' எனக்கூறி, நம்நாட்டையடைந்த பத்தினிக் கடவுளைப் பண்புடன் வழிபடல் வேண்டுமெனக் கூறினள்.

அதுகேட்ட அரசன் அமைச்சரை நோக்க, அவர்களும் பத்தினிப் பெண்ணிற்குப் படிவஞ் சமைத்தற்குப் பொதியமலையினின்றேனும், இமயமலையினின்றேனும் கல்லெடுத்து வருதல் தக்கதென்றும், பொதியினின்றுகொண்டுவரின் காவேரியிலும், இமயத்தினின்று கொண்டுவரின் கங்கையிலும் நீராட்டிவருதல் தக்கதென்றும் கூறிஞர்கள். செங்குட்டுவன், பொதியமலையிற் கல்லெடுத்துக் காவிரியில் நீராட்டுதல், வீரர் வீரர்கள் விளங்கிய—விளங்குகின்ற எங்கள் சேரவம்சத்திற்குப் பெருமையுடைய தாகாது. ஆதலின், இமயஞ்சென்று கல்லெடுத்துக் கங்கையில் நீராட்டுதலே சிறந்தது. கல்லெடுத்தற்கு இமயவாசன் இணங்காஞயின், வஞ்சி சூடிச் சேனைகளுடன் சென்று அவனைவென்று கற்கொண்டு வருவேனெனக் கூறினன். உடனே நகரில்,

'வாழ்க எங்கோ மன்னவர் பெருந்தகை
யூழிதொ றூழி யுலகங் காக்கென
விற்றலைக் கொண்ட வியன்பே ரிமயத்துக்
கற்கொண்டு பெயருமெங் காவல ஞதலின்
வடதிசை மருங்கின் மன்ன ரெல்லா
மிடுதிறை கொடுவந் தெதிரீ ராயிற்
கடற்கடம் பெறிந்த கடும்போர் வார்த்தையும்
விடற்சிலை பொறித்த வியன்பெரு வார்த்தையும்
கேட்டு வாழுமின் கேளீ ராயிற்
றேட்டுணை துறக்குந் துறவொடு வாழுமின்
தாழ்கழன் மன்னன் றன்றிரு மேனி
வாழ்க சேஞ முகமென வாழ்த்தி''

யானைமேல் முரசேற்றிப் பறையறையப்பெற்றது. பின்பு செங்குட்டுவன்,

'வடதிசை மருங்கின் மன்னர் முடித்தலைக்
கடவு ளெழுதவோர் கற்கொண் டல்லது
வறிது மீளுமென் வாய்வா ளாகிற்
செறிகழல் புனைந்த செருவெங் கோலத்துப்
பகையரசு நடுக்கா து பயங்கெழு வைப்பிற்
குடிநடுக் குறூஉங் கோலே ஞகுக''

எனச் சபதஞ்செய்து, மறுநாட்காலையில் ஐம்பெருங் குழுவும் எண்பேராய முஞ்சூழ, மூன்றும் பிறையணி முக்கணன் பாதுகைகளை, யாரையும் இறைஞ்சாச் சென்னியால் இறைஞ்சி வலங்கொண்டு, பாதுகைகளைத் தரித்து யானையேறி நன்முகூர்த்தத்திற் புறப்பட்டனன். அதுபோழ்து 'ஆடகமாடம்' என்னும் அவ்வூர்த் திருமால் ஆலயத்தினின்று பிரசாதங்கொண்டு சிலர் வந்து அரசனிடம் அளித்து 'குடக்கோக்குட்டுவன் கொற்றங்கொள்க'

என வாழ்த்தினர். பெற்ற செங்குட்டுவன், யாவர்க்கும் இறை உமைமண வாளரோ'யாகலான், அவர் பாதுகைகளைத் தாங்கிய முடியின்மேல், திருமா லின் பிரசாதத்தை வைத்தற் கஞ்சியவனுகி, தோளில்வைத்துப் பிரயாணங் கொண்டனன்.

இங்ஙனம் தன்பெருஞ் சேனைகளுடன் சென்ற செங்குட்டுவன், இம யம் அடைந்து ஆங்குத் தன்னுடன் எதிர்த்த உத்தரன், விசித்திரன், கன கவிசயர் முதலானவர்களை வென்று, வஞ்சினங்கூறியவாறே இமயத்துக் கல் லெடுத்துப் பகைவர் தலையிலேற்றிக் கங்கையில் நீராட்டித் தந்நாடு போந்து முன்பு கண்ணகி சுவர்க்கமடைந்த வேங்கைமா நிழலிலேயே அமைத்த கோயிலிற் பத்தினிக்கடவுளைப் பிரதிஷ்டை செய்து இனிது வாழ்ந்தனன். பாண்டியநாட்டிலும் பத்தினிக் கடவுளைப் பிரதிஷ்டைசெய்து, பொற்கொ ல்லர் ஆயிரவரைப் பலிகொடுத்துப் பூசைநடாத்தி நாடுசெழிக்க வாழ்ந்தனர்.

உண்மைச் சரிதம் இவ்வாருக, தற்காலம் நாடகக் கொட்டகைகளில் கோவலன் சரித்திரம் நடிக்கப்பெறுவதில், உண்மைக்கு மாறுன நிகழ்ச்சி கள் காணப்படுகின்றன. முதலாவதாக, கோவலனுக்கும் மாதவிக்கும் சம் பந்தமேற்பட்டது கரிகாற் பெருவளத்தானது அரசசபையில் மாதவி நட னமாடிய காலத்தெனச் சிலப்பதிகாரங் கூறுகின்றது. நாடகக் கொட்ட கையிலோ, கோவலனது விவாகத்திற்கு மாதவி நடனத்திற்கு வந்ததாக வும், அதுகாலை மாதவி தான் ஒருமாலையைச் சுழற்றி வீசுவதாகவும், அது யார்கழுத்தில் விழுகின்றதோ அவர்கள் தன்னுடன் வந்துவிட வேண்டுமெ ன்றுங் கூறி, மாலையைச்சுழற்ற, அது கோவலன் கழுத்தில் விழுந்ததென் றும், தீர்மானப்படி கோவலனை மாதவி யழைக்க, அவன் அவளுடன் செல லச் சம்மதிக்கவில்லையென்றும், பின்னர் தன்னுல் மடித்துத் தரப்படும் வெற்றிலையையேனும் அருந்தும்படி மாதவி கோவலனிடம் வேண்ட, கோ வலன் சம்மதித்ததாகவும், மாதவி வெற்றிலையில் மயக்கமருந்து சேர்த்துக் கோவலனிடம் கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டதாகவும், பின்னர் கோவ லன், மாதவியினிடத்து மையல் மிகுந்தவனுய் அவளை அடைந்து வாழ்ந் துவந்தானென்றும் நடித்துக்காட்டப் பெறுகின்றது. இஃது எவ்வளவு முறையற்றதான செயலாகும்? கல்யாணத்தில், பரதநாட்டியத்திற்காக அழைக்கப்பெற்ற தாசி, தான் சுழற்றும்மாலை விழுந்தவர்களைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு சென்றுவிடுவதாகக் கூறுவாளா? அவ்வாறு, அவள் கூறினுலும் சபையிலிருந்தோர் சம்மதித்திருப்பார்களா? என்பதை நன்கு யாலோசிக்கவேண்டும்.

இரண்டாவதாக கோவலன் மாதவியைவிட்டுப் பிரிந்து, கண்ணகியி னிடம் திரும்பியமைக்குக் காரணம், கண்ணகி தான் மிகுந்த வியாதி யுடை யவளா யிருப்பதாயும், சிலநாட்களுள் இறப்பது நிச்சயமென்றும், தனக்கு அந்தியக்கிரியைகள் செய்வதற்கு அவசியம் உடனே வரவேண்டு மென்றும் கோவலனுக்குக் கடிதமொன் றெழுதியதாகவும், கோவலன் அக்கடிதத் தை மாதவிக்குக் காட்டி, வீடுசெல்ல விடை கேட்டானென்றும், மாதவி கோவலனைப்போற் பொற்பதுமையொன்று செய்து கொடுத்தால், வீடுசெ ல்ல விடைதருவதாகக் கூறினளென்றும், கோவலன் அவ்வாறே பொற்பது மையொன்று செய்து கொடுத்துவிட்டு விடை பெற்றுக்கொண்டு வந்தானெ ன்றும், வந்ததுமுதல் மாதவியைச் சிறிதும் விரும்பாமல், கண்ணகியி

னிடத்திலேயே இருந்தானென்றும் நடித்துக்காட்டப்பெறுகிறது. மூன்மா தவிகொடுத்த மயக்கமருந்தால் அவளை அடைந்தானென்று நடித்து, பின் கண்ணகியை அடைந்ததற்குக் காரணம் இவ்வாறு கூறுதல் சரியன்றே? எவனால் மருந்து வைக்கப்பட்டதோ அவளைவிட்டு நீங்கவேண்டுமாயின், அவள் வைத்த மருந்தை எடுத்தாலன்றோ இயலும்?

மூன்றாவதாக, சிலம்பு விற்பதற்கு மதுரையை யடைந்த கோவலன், ஆயர்பாடியில் மாதரியிடம் கண்ணகியை ஒப்பித்து, தான் நகர்சென்று வருதற்குக் கண்ணகியிடம் விடைகேட்கும்போது, 'நல்வாக்குநீகொடடி, நான் சிலம்பு விற்றுவாரேன், செல்வாக்குடனிருந்தோம், தேவடியாள் கடனுற்றோம், மாங்காயழுகிவிடும், மல்லிகைப்பூ வாடிவிடும், தேங்காயு டைந்துவிடும், திருவிளக்குநின்றுவிடும், வைத்த அடையாளங்கள் மாறா மல் தானிருந்தால், செத்து மடியாமலே திரும்பி வருவேனடி'' எனக்கூறி யதாகச் சொல்லுகின்றார்களே! இஃதென்ன விபரீதம்! வியாபாரம் செய்யப் போகும் ஒருவன், தன் மனைவினிடம் தான் இறந்தால் இன்னஇன்ன மாதி ரியிருக்குமெனச் சொல்லிக்கொண்டு செல்வானா? மனைவியைவிட்டுப் பிரிந் து வியாபாரத்திற்குச் செல்லும்போது தான் இறக்கநேரும் என்பதுதானா தோன்றும்?

நான்காவதாக, கோவலன் பாண்டியனால் வெட்டப்பட்டபின், கண் ணகி காளியாகி நெடுஞ்செழியனைக் கொன்று, அவனது குடரைப்பிடுங்கி மாலையாகப் போட்டுக் கொண்டாளென நடிக்கின்றனர். ஆ! என்னே! என் னே! அறமே ஓருருவெடுத்தென வுதித்திருந்த கண்ணகி—கற்பிற்சிறந்த பொற்புடையளாக விளங்கிய கண்ணகி—நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நாற்குணமும் நாற்படையா யமைந்த கண்ணகி, அரசனைக் கொன்று அவன் குடரைப் பிடுங்குவாளா?

ஐந்தாவதாக, அரசன் மனைவியாகிய கோப்பெருந்தேவியின் சிலம் பைப் பொற்கொல்லன் பழுக்கச்சுட்டு முற்றத்தில் வைத்திருந்ததாகவும், அதனைப் புறா ஒன்று கௌவிக்கொண்டு சென்றுவிட்டதாகவும், அதனாலே யே தனது சிலம்பைக் கொண்டுவந்த கோவலனைத் திருடனெனக் காட்டிக் கொல்லன் கொல்லச் செய்ததாகவும், கண்ணகி நெடுஞ்செழியனிடம் கூறுவ து எவ்வளவு பொருத்தமற்றதென்பதை உணரவேண்டும். சிலம்பைப் புறா கௌவிச்செல்வதற்குக் காரணமென்ன? அது தின்பண்டமா?

இன்னும், இவைபோன்ற ரசாபாசமான விஷயங்கள் பல நாடகத்திற் கலந்திருக்கின்றன. கண்ணகி கர்ணகையாகவும், மாதவி மாதகியாகவும், கோவலன் கோவிலனாகவும், கோவலவனாகவும் ஆகிவிடுகிறார்கள். பொற் கொல்லனுக்கு, 'வஞ்சிப்பத்தன்' என்ற பெயர் எங்கிருந்து கண்டுபிடித் தார்களோ தெரியவில்லை. இதனால், உண்மைப்பெயர்களும், உண்மைச் சரித நிகழ்ச்சிகளும் மறைந்து விடுகின்றன. இந்நிலையில், நாடகங்களைப் பார்ப்பதால் மனவேறுபாடுகள் உண்டாகுமேயொழிய அமைதி ஏற்படாது. ஆதலின், உண்மைச் சரிதங்களைப் படித்தல் நலம்.

---

# சைவச் சுமங்கலைகளும் தெய்வத் திருநீறும்.

திருவாளர்: க. ராஜமாணிக்கப் பிள்ளை அவர்கள்.

விபூதி இன்றியமையாத சிவசின்னம். உத்தூளனம் திரிபுண்டரம் என அதனை அணியும்வகை இரண்டு. அவ்விரண்டும் ஆடவர்க்கு மட்டுமல்ல, பெண்டிர்க்கும் உரியவே. தென் சில்லாக்களில் சைவசமயத்து ஆடவரும், பெண்டிருள் அறுதலிகளோடு வாழ்வரசிகளும் நெற்றிநிரம்ப நீற்றைப் பூசுகின்றனர்; குழைத்துமிடுகின்றனர். அவ் வாழ்வரசிகள் விபூதி யுத்தூளன திரிபுண்டரங்களைப் போன்று குங்குமப் பொட்டை மதிப்பதில்லை. அஃது அவர்களுக்கு அலங்கார அணிதான். அவசிய அணியன்று. அவசிய அணிகள் மஞ்சட்பூச்சும் விபூதிதாரணங்களுமே. அங்கு நாட்டுப் புறத்துச் சிவாலயங்களிலுள்ள அம்பா விக்கிரகங்களுக்குப் புஷ்பார்ச்சனை நடக்கின்றது. அவற்றைத் தரிசிக்க வருபவர்க்கு வழங்கப்படுவதும் விபூதி. ஆனல், வடசில்லாச் சைவருட் பல ஆடவர் விபூதியை உத்தூளனமாகமட்டுந் தரிக்கின்றனர். பெண்டிருள் அறுதலி நெற்றிகளிற்றான் விபூதியின் உத்தூளன திரிபுண்டரங்களுண்டு. கட்டுக்கழுத்திகளின் நெற்றியிற் காணக்கிடப்பது குங்குமப் பொட்டொன்றே. விபூதியை அவர்களின் நெற்றியிற் பார்ப்பது தூர்லபம். சிவாலயங்களிலுள்ள அம்பாவிக்கிரகங்களுக்குக் குங்குமார்ச்சனை நடக்கின்றது. அதனைத் தரிசிப்போர் பெறும் பிரசாதமுங் குங்குமம். விபூதியன்று. அவ் விருவகை யாசாரங்களையும் அவ்வச்சில்லாக்களில் இன்றுங்காணலாம். வடசில்லாச் சைவசமயத்து வாழ்வரசிகள் அங்ஙனம் சைவ மங்கலமாகிய விபூதி யுத்தூளன திரிபுண்டர தாரணங்களை அடியோடு அலக்ஷியம் பண்ணியிருப்பதும், குருக்கண்மார் அந்நாட்டாலயங்களிலுள்ள அம்பாவிக்கிரகங்களைக் குங்குமத்தாலர்ச்சிப்பதும், தரிசிகளுக்கு விபூதியை விலக்கிக் குங்குமத்தைப் பிரசாதிப்பதும் சைவாசாரந்தானு? வைதிகசைவபண்டிதர்கள் இச் 'சிவநேசன்' மூலம் தக்கபிரமாணபலத்தோடு விடைதருக. யாமறிந்தவரை அது அநாசாரமென்றே படுகிறது. அதன் காரணத்தையுங் கூறிவிடுகின்றேம். ஸ்மார்த்தப் பிராமணர்கள் அந்தரங்கத்திற் சாக்தர்கள்; பகிரங்கத்திற் சைவர்கள்; லௌகிகத்தில் வைஷ்ணவர்கள். ஆகலின், சாக்தமத சின்னமாகிய குங்குமத்தைத் தம் பெண்டிருள் மங்கலைகளும், சைவசமய சின்னமாகிய விபூதியை அறுதலிகளும், வைஷ்ணவமத சின்னமாகிய கோபீசந்தனத்தைத் தாமும் அணியுமாறு அவர்கள் ஏற்பாடு செய்துகொண்டார்கள். அவர்களது ஆதிக்கவிசேடத்தால் அம்பாசந்நிதிகளில் குங்குமம் பிரபலம் பெற்றது. சைவசமயிகள் அப் பார்ப்பனரையுஞ் சைவரென மயங்கிப் பின்பற்றலாயினர். அதன் பலனே அத் தூராசாரம்.

# சிவமகிமை.

பொன்னேரி பிரம்மஸ்ரீ தி. மா. ஸ்ரீநிவாச ஐயங்கார் அவர்கள்.

(ஸ்ரீ கிருஷ்ணப்ரசங்கம்: பாரதம்-அநுசாஸனம்-265, 266-வது அத்யாயங்களின் திரட்டு.)

யுதிஷ்டிரர், 'மாதவரே! சங்காருடைய அம்சமான துர்வாஸருடைய அநுக்கிரகத்தினால் நீர் அடைந்த ஞானத்தை எனக்கு உரைக்கக்கடவீர். புத்திமான்களிற் சிறந்தவரே! மகாத்மாவான அந்தச் சங்கரருடைய மகிமையையும் நாமங்களையும் தெளிவாக முழுதுந் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்'' என்று கேட்க, வாசுதேவர் சொல்லலானார்.:—

''அரசரே! சிவனுக்கு வந்தனஞ் செய்து, நான் அடைந்த நன்மையையும் ஸம்பாதித்த புகழையும் உமக்குச் சொல்வேன். அரசரே! காலையிலெழுந்து அநுஷ்டானங்களைச் செய்து கரங்குவித்துச் சதருத்ரீயத்தைப் படிப்பவனுக்குக் கிடைக்காதது ஒன்றுமில்லை. ருத்ரரெனப்படும் சிவனைப் பற்றிச் சொல்லுகிறேன்; கேளும். பிரம்மதேவர் பெருந்தவம் செய்து அத்தவத்தின் முடிவில் சங்கரரைப் படைத்தார். (முன்னிற்கக் கண்டார்). மகாதேவருக்கு மேற்பட்ட பொருள் ஒன்றுமில்லை. மூவுலகங்களிலுமுள்ள பிராணிகளுக்குக் காரணம் அவரன்றோ? அம் மகாத்மாவின் முன்னிற்க யார்க்கும் முடியாது. தக்ஷப்பிரஜாபதி செய்த பெரிய யாகத்தில் கோபித்த சிவன் அந்த யாகத்தை யழித்துக் கர்ஜித்தார். அப்போது அந்த ருத்ரர் தேவர்களை எதிர்த்துப்போனார். பகதேவதையின் கண்களை உதிர்த்தார். சூரியனை எதிர்த்துச் சென்றார். புரோடாசமென்னும் ஹவிஸைப் பக்ஷிக்கும் சூரியனுடைய பற்களை உதிர்த்தார். தேவர்களும் ரிஷிகளும் பயந்தனர். பிறகு தேவசிரேஷ்டர்கள் சிவனைப் பிரார்த்தித்தனர். அப்போது தேவர்கள் கரங்குவித்துச் சதருத்ரீயத்தை ஜபித்தனர். மஹேசுவரர் கோபம் நீங்கினர். பிறகு, தேவர்கள் யாகத்தில் சிவனுக்குச் சிறந்தபாகத்தை ஏற்படுத்தினர். அசுரர்களுடைய மூன்று பட்டணங்கள் ஆகாயத்திலிருந்தன. (அவர்களால்) பீடிக்கப்பட்ட தேவர்களனைவரும் ருத்ரரைச் சாணமடைந்தனர். சங்கரர் விஷ்ணுவைச் சிறந்த அம்பாகவும், அக்கினியை அதற்கு முனையாகவும், சூரிய புத்திரனான யமனை அம்பின்காம்பாகவும், ஓங்காரத்தை வில்லாகவும், உத்தமமான காயத்திரியை நாணாகவும், பிரம்மாவை சாரதியாகவும் வைத்துக்கொண்டு அந்தப் பாணத்தைப் பிரயோகித்து அந்தப்பட்டணங்களெல்லாவற்றையும் பிளந்தார். பாரதரே! தேவர்கள் அவரோடு யுத்தம் செய்யமாட்டாமற் போயினர். பிரம்மா முதலியவரனைவரும் அந்த ஈசுவரரை யறியாமலும் மயங்கினர். பிறகு பிரம்மா அந்த உமாபதிக்கு வந்தனம் செய்தார். அநேக நூற்றாண்டுகளாலும் அவர்குணங்களைச் சொல்வது இயலாது. யுதிஷ்டிரரே! சங்கரருடைய மகிமையை என்னிடம் தெரிந்து கொள்ளும். உக்ரர், மகாதேவர், ஸ்தாணு, மகேசுவரர், ஏகாக்ஷர், த்ரியம்பகர், விசுவரூபர், சிவன் என்று அவரைச் சொல்லுகின்ற

ணர். அவ்வருக்கு ஒரு மூர்த்தி உக்ரமென்றும், மற்றொரு மூர்த்தி சிவமென்றும், இன்னும்பல மூர்த்திகளும் உளவென்றும் வேதம் தெரிந்த பிராமணர்கள் அறிந்திருக்கின்றனர். அக்கி மின்னல் சூரியன் இவைதாம் அவருடைய கொடிய மூர்த்திகள். தர்மம் ஜலம் சந்திரன் இவை அவருடைய ஸௌம்யமான சிவமூர்த்திகள். அவர்தேகத்தில் ஒருபாதி அக்கியென்றும், மற்றொருபாதி சந்திரனென்றும் சொல்லப்படுகின்றன. அவர் மகானுகவும் ஈசுவரராகவு மிருப்பதினுல் மகேசுவரரென்று சொல்லப்படுகிருர். எல்லாவற்றையும் எரிப்பதனுலும் கோபித்திருப்பதனுலும் தாங்கமுடியாம லிருப்பதனுலும் பராக்ரம மிருப்பதனுலும் ருத்ரரென்று சொல்லப்படுகிருர். தேவர்களுக்கெல்லாம் மிகப்பெரியவரா யிருப்பதனுலும் எல்லாவுலகங்களையும் ரக்ஷிப்பதனுலும் மகாதேவரென்று சொல்லப்படுகிருர். அவருடைய ஜடி தாம்ரவர்ணமென்னும் செம்மட்டை நிறமாயிருப்பதனுல் தூர்ஜடை யென்று சொல்லப்படுகிருர். மனிதர்களின் க்ஷேமத்தையே விரும்புவதனுல் சிவனென்று சொல்லப்படுகிருர். தாம் உயரமாயிருந்து மனிதர்களின் உயிரை எரிப்பதனுலும் தாம் அழியாமலிருப்பதனுலும் தமது லிங்கம் எக்காலமும் அழியாமலிருப்பதனுலும் ஸ்தாணு வென்று சொல்லப்படுகிருர். பூத பவிஷ்யத் வர்த்தமானங்களும், ஸ்தாவர ஜங்கமங்களுமாகப் பலரூபங்கள் அவருக்கிருப்பதனுல் பஹுரூபரென்று சொல்லப்படுகிருர். எல்லாத்தேவர்களும் அவரைச் சார்ந்திருப்பதனுல் விசுவரூபரென்று சொல்லப்படுகிருர். ஆயிரம் பதினுயிரம் கண்களுள்ளவராகவும், எங்குங் கண்களுள்ளவராகவும் இருப்பதனுலும், அவர் கண்ணிலிருந்து ஒளியுண்டாவதனுலும் ஸர்வதஸ்சக்ஷு என்று சொல்லப்படுகிருர். பசுக்க (ஆத்மாக்க) ளெல்லாவற்றையும் காப்பதனுலும் அவற்றுடன் மகிழ்ந்திருப்பதனுலும் அவற்றை ஆளுவதனுலும் பசுபதி யென்று சொல்லப்படுகிருர். அவருடைய லிங்கமானது பக்தர்களை யனுக்கிரகிப்பதற்காக நித்யப்ரம்மசாரி விரதத்தோடிருப்பதனுல் கூடலிங்கரென்று சொல்லப்படுகிருர். அவருடைய லிங்கத்தை உலகம் பூஜிக்கிறது. அந்த மகாத்மாவுக்கு அந்தலிங்கம் பிரியமானது. அந்த மகாத்மாவினுடைய விக்ரகத்தைப் பூசிப்பவன் லிங்கத்தையும் பூசிக்கவேண்டும். நாள்தோறும் லிங்கத்தைப் பூசிப்பவன் பெரிய ஐசுவரியத்தை யடைவான். ரிஷிகளும் தேவர்களும் கந்தர்வர்களும் அப்ஸரஸுகளும் மேனுேச்கியிருக்கும் அந்தலிங்கத்தையே பூசிக்கின்றனர். லிங்கத்தைப் பூஜித்தால் மகேசுவரர் ஸந்தோஷமடைகிருர். பக்தர்களிடத்தில் அன்புள்ள சங்கரர் சந்தோஷமடைந்து பக்தர்களுக்கு சுகத்தைக் கொடுக்கிருர். ரக்ஷிப்பதில் சமர்த்தராகிய அவர் மகிழ்ந்து அநுக்ரகம் வைத்துச் சரணுகதர்களுக்கு முக்தியளிக்கிருர். மனிதர்களுக்கு ஆயுளையும் ஆரோக்கியத்தையும் ஐசுவரியத்தையும் ஸுகத்தையும் நிரம்பின போகங்களையும் கொடுப்பவரும் திரும்பி யெடுப்பவரும் அவரே. அவருடைய ஐசுவரியந்தான் இந்திராதி தேவர்களிடத்திலும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. வேண்டினவற்றை யெல்லாம் பெறும் சக்தியிருப்பதனுல் ஈசுவரரென்று சொல்லப்படுகிருர். பெரிய உலகங்களுக்கு ஈசுவரராயிருப்பதனுல் மகேசுவரரென்று சொல்லப்படுகிருர். கடலிலுள்ள வடவாமுகாக்கினியும் அந்த ஈசுவரரது வாய்தான்".

---

# கிருஷ்ணார்ச்சுனரது கயிலாசயாத்திரை.

பொன்னேரி பிரம்மஸ்ரீ தி. மா. ஸ்ரீநிவாச ஐயங்கார் அவர்கள்.

(ஒரு சிறு ஆராய்ச்சி.)

வடமொழி வியாசபாரதத்தின் சரியான தமிழ் மொழிபெயர்ப்புக் கும்பகோணம் காலேஜ் ரிடயர்ட் தமிழ்ப்பண்டிதர் மணலூர்—வீரவல்லி—இராமாநுஜாசாரியரால் அச்சிடப்பட்டதில், ஸெண்ட் ஜோஸப்காலேஜ்ஸம்ஸ்கிருத தலைமைப் பண்டிதர், மஹாவித்வான், ஸாரஸ்வதஸாரஜ்ஞர், கவிசிகாமணி, ஸ்ரீ உ. வே. T. V. ஸ்ரீநிவாஸாசாரிய ரவர்களால் மொழிபெயர்த்துஷை பதிப்பாளரவர்களால் 1922-ல் சென்னைக் கணேச அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்ட துரோண பர்வத்து 79, 80, 81-வது அத்தியாயங்களிற் கண்ட சிலவரிகள் வருமாறு:—

"ஸ்ரீவாஸுதேவர் பிறகு அர்ச்சுனனுடைய அரண்மனைசென்று ஆசமனம் செய்து மங்களகரமான தரையில் தர்ப்பங்களை நல்ல படுக்கையாகப் பரப்பினார். பிறகு, அந்தப் படுக்கையை உத்தமமான ஆயுதங்களால் சூழப்பட்டதாகச் செய்து, மாலையினாலும் அக்ஷதங்களாலும் கந்தங்களாலும் சாஸ்திரமுறைப்படி அலங்கரித்தார். பிறகு, ஆசமனஞ் செய்தவனான பார்த்தனுக்கு, திரியம்பகரின்பொருட்டுத் தினந்தோறும் இரவில் செய்வதான பலியைக் காண்பித்தார். பிறகு, பார்த்தன் சந்தோஷமடைந்து மாதவரைக் கந்தங்களாலும் பூமாலைகளாலும் அலங்காரஞ் செய்து, இராத்திரியில் செய்வதான அந்தப்பலியை அந்தத் திரியம்பகருக்காக நிவேதனஞ் செய்தான். கோவிந்தர் பல்குனனைப் பார்த்து, 'நல்லது, நல்லது' என்று மறுமொழிசொன்னார். ஸ்ரீகண்ணபிரான் கிழக்குமுகமாகவிருந்து ஜலத்தைத்தொட்டு அர்ஜுனனுடைய ஹிதத்தின்பொருட்டு, 'பார்த்த! மகேசுவரர் எந்த அஸ்திரத்தினால் எல்லாத் தைத்தியர்களையும் யுத்தத்தில்கொன்றாரோ அப்படிப்பட்ட பாசுபதமென்கிற உத்தமமான அஸ்திரமானது சாஸ்வதமானது. அந்த அஸ்திரத்தை இப்பொழுது நீ அறிந்தால் நாளைத்தினம் ஜயத்ரதனைக் கொல்வாய். ஆதலால், அதனை அறிவதற்காக விருஷபத்வஜரை மனத்தினால் சரணமடைவாயாக. தனஞ்சய! அந்தத் தேவரை மனத்தினாலே தியானஞ் செய்து மௌனத்துடனிரு. பிறகு அவருடைய அநுக்ரஹத்தினாலே மகிமையுடைய அந்த அஸ்திரத்தைப் பக்தியினால் நீ அடைவாய்". என்று சொன்னார்.

பிறகு, தனஞ்சயன் ஆசமனஞ்செய்து ஏகாக்ரசித்தத்தோடு மனத்தினால் ருத்திரரைத் தியானித்தான். அர்ச்சுனன் தியானத்திலிருந்துகொண்டு தன்னைக் கேசவருடன் ஆகாயத்தில் கண்டான். கேசவரால் வலக்கையில் பிடிக்கப்பட்டு அந்தப் பார்த்தன் அவரோடு வேககதியுடையவனாக ஆகாயத்தை அடைந்தான். கிருஷ்ணரோடு கூடின அர்ச்சுனன் ஆகாசத்தையும் ஸ்வர்க்கத்தையும் பூமியையும் விஷ்ணுபதமென்னு மிடத்தையும் அடைந்து வில்லிலிருந்து விடுபட்ட அம்புபோலச் சென்றான். அப்பொழுது அவன் ஒளியுள்ள ஒரு மலையையும் கண்டான். அதன் உச்சியில் விருஷபத்வஜ

னைக் கண்டான். வாசுதேவரோ பார்த்தனோடு கூட அவரைப்பார்த்து, சாஸ்வதமான வேதமந்திரத்தை உச்சரித்துக்கொண்டு சிரசினால் வணங்கினார். அந்த ஈசுவரரை அப்பொழுது கிருஷ்ணார்ஜுனர் இருவரும் வாக்கினாலும் மனத்தினாலும் புத்தியினாலும் செய்கையினாலும் நமஸ்காரஞ் செய்தார்கள். அந்தச் சங்கரரை அவ்விருவர்களும் சரணமடைந்தார்கள். மறுபடியும் மறுபடியும் வந்தனம் பண்ணினான் அர்ச்சுனனும். அவன் ஜனார்த்தனரோடு கூடி ருத்திரரைச் சரணமடைந்தான். பிறகு, ஈசுவரர், வந்து சரணமடைந்த அவ்விருவர்களையும் பார்த்துப் புன்னகையுடன், 'புருஷ சிரேஷ்டர்களே! சிரமத்தைவிட்டு எழுந்திருங்கள். நீங்கள் வந்த காரியம் என்ன? அதனை நிறைவேற்றுகிறேன்.' என்று கூறினார்.

வாசுதேவர் அர்ச்சுனனிருவரும் அபிமுகமாக எழுந்திருந்து கைகளைக் குவித்துக்கொண்டு பக்தியோடு திவ்யமான ஸ்தோத்திரத்தினால் பின்வருமாறு துதித்தார்கள்:—"சர்வலோகங்களுக்கும் பிரபுவா யிருக்கின்றவரும் பிராணிகளை சம்ஹரிக்கின்றவரும் அழச்செய்பவரும் வரங்களைக் கொடுக்கின்றவரும் பசுக்களுக்குப் பதியும் எப்பொழுதும் உக்ரஸ்வரூபியும் ஜடையுள்ளவரும் தேவர்களுள் சிறந்த தேவரும் பயங்கரமானவரும் மூன்று கண்களையுடையவரும் சாந்தியுடையவரும் சகலைசுவர்யமுள்ளவரும் யாகத்தை அழித்தவரும் அந்தஹாசுரனை சம்ஹரித்தவருமான தேவரீருக்கு வந்தனம். சுப்பிரமணியருக்குப் பிதாவும் நீலகண்டரும் உலகத்தை ஸ்ருஷ்டித்தவரும் பிநாகமென்கிறவில்லைக் கைக்கொண்டவரும் ஹவிசைப் பெறத்தக்கவரும் அழிவற்றவரும் எப்பொழுதும் விபவத்தில் நிலைபெற்றிருப்பவரும் மிக்க செல்விறமுடையவரும் மங்கலான காந்தியுடையவரும் வேடவடிவம் பூண்டவரும் பிறரால் ஜயிக்கப்படாதவரும் எப்பொழுதும் கறுத்தசிகையுடையவரும் சூலத்தையுடையவரும் ஞானக்கண்ணை யுடையவரும் தீக்ஷையை யுடையவரும் ரக்ஷகரும் மூன்றுகண்களையுடையவரும் அக்னியினிடத்தில் இந்திரியத்தைவிட்டவரும் எண்ணத்தகாதவரும் அம்பிகாநாதரும் எல்லாத் தேவர்களாலும் துதிக்கப்பெற்றவரும் விருஷபத்தைக் கொடியாகவுடையவரும் முண்டிதமானவரும் சடையையுடையவரும் பிரம்மசாரியா யிருப்பவரும் ஜலத்தில் தவம் செய்கின்றவரும் பிராம்மணர்களுக்கு ஹிதத்தைத் தேடுகின்றவரும் ஜயிக்கப்படாதவரும் உலகத்தை வடிவமாகவுடையவரும் உலகத்தை ஸ்ருஷ்டித்தவரும் உலகத்தைச் சூழ்ந்துகொண் டிருக்கின்றவரும் பூதகணங்களால் சேவிக்கத் தக்கவரும் எப்பொழுதும் பிரபுவாயிருக்கின்றவருமான தேவரீருக்கு வந்தனம்; வந்தனம். வேதங்களால் நிரம்பின முகத்தையுடையவரும் சர்வஸ்வரூபியும் மங்களத்தை யுண்டுபண்ணுகிறவரும் மங்கள ஸ்வரூபியும் வித்தைக்கெல்லாம் அதிபதியுமான தேவரீருக்கு வந்தனம். பிரஜைகளுக்குப் பதியான தேவரீர்க்கு வந்தனம். அடையத்தக்கவரும் விரும்பத்தக்கவரும் ஸ்தோத்திரம் செய்யத்தக்கவரும் எப்பொழுதும் உத்தமமான பதத்திலிருக்கின்றவரும் தேவர்களுக்குத் தேவரும் மகாபூதங்களைத் தரிக்கின்றவருமான தேவரீருக்கு வந்தனம். எல்லாவுலகங்களுக்கும் நாதரான உமக்கு வந்தனம். காலாட்களான யுத்தவீரர்களுக்குப் பதியான தேவரீருக்கு வந்தனம். உலகத்திற்கு நாதரா யிருக்கின்றவரும் மகத்துக்களுக்கெல்லாம் பதியா யிருக்கின்றவருமான தேவரீருக்கு வந்தனம்; வந்தனம். ஆயிரம் சிரங்களையுடையவரும் ஆயிரம் கைகளையுடைய

வரும் மிருத்யுஸ்வரூபியா யிருக்கின்றவரும் ஆயிரம் கண்களையும் கால்களையுமுடையவரும் எண்ணமுடியாத செய்கைகளையுடையவருமான தேவரீருக்கு வந்தனம்; வந்தனம். பிரபுவே! பொன்னிறமுடையவரும் பொற்கவசமணிந்தவரும் எப்பொழுதும் பக்தர்கள் விஷயத்தில் தயையுள்ளவருமான தேவரீருக்கு வந்தனஞ் செய்கிறோம். எங்களுடைய அபீஷ்டமானது சித்திக்கவேண்டும்'' என்றுகூறினார்கள். இவ்வாறாக அர்ச்சுனனோடு சேர்ந்து வாசுதேவர் மகாதேவரை ஸ்தோத்திரம் செய்துவிட்டு அப்பொழுது பாசுபதாஸ்திரத்தை அடைவதற்காக அவரை ப்ரசன்னமாகும்படி செய்தார்.

பிறகு, தெளிந்த மனத்தையுடைய பார்த்தன் கைகளைக் குவித்துக்கொண்டு சமஷ்டிஸ்வரூபியும் தேஜோநிதியுமான விருஷபத்வஜரை மலர்ந்த கண்களால் கண்டான். தன்னால் நன்றாக இரவில் ஏற்படுத்தப்பட்டதும் வாசுதேவருக்கு நிவேதனம செய்யப்பட்டதும் சாஸ்திரத்தில் சொல்லியபடி அநுஷ்டிக்கப்பட்டதுமான அந்தப் பலியையும் முக்கண்ணரருகில் கண்டான். பிறகு, பாண்டவன் சங்கரரை நோக்கி, 'நான் திவ்யமான அஸ்திரத்தை விரும்புகிறேன்.' என்று கூறினான். பிறகு ருத்ரராலே எந்தத்தடாகம் குறிப்பிடப்பட்டதோ அந்தத் தடாகத்தை நரநாராயணரிஷி ஸ்வரூபர்களான அவ்விருவரும் அடைந்தார்கள். அர்ச்சுனனும் அச்சுதரும ஜலத்தினுள் பயங்கரமான ஒரு சர்ப்பத்தைக் கண்டார்கள். இரண்டாவதான வேறு ஒருசிறந்த சர்ப்பத்தையுங் கண்டார்கள்; பிறகு கிருஷ்ணரும் பார்த்தனும் ஆசமனஞ் செய்து கைகளைக்குவித்து ருத்ரரை நமஸ்கரித்து சதருத்ரீயமென்கிற அந்த வேதமந்திரத்தை உச்சரித்துக்கொண்டு அந்த இரண்டு சர்ப்பங்களையும் ஸ்தோத்திரம் பண்ணினார்கள். பிறகு, அவ்விரண்டு பெரிய சர்ப்பங்களும் ருத்ரருடைய மகிமையினாலே வில்லும் அம்புமாயின. அவ்விருவரும் இரண்டையும் எடுத்துக்கொண்டு வந்து பரமசிவனிடத்தில் கொடுத்தார்கள். பிறகு, அர்ச்சுனன் ஈசுவரனிடத்திலிருந்து திவ்யமான பாசுபதாஸ்திரத்தைப் பெற்று (அவனும்) ஹ்ருஷீகேசரும் அந்தமகேசுவரரை முடிகளாலே பலமுறை வணங்கினார்கள். அர்ச்சுனனும் கேசவரும் ருத்ரரால் அநுமதிகொடுக்கப்பட்டு மிகுந்த சந்தோஷத்தோடு தம் சேனை தங்கியிருக்குமிடத்தை வந்தடைந்தார்கள்.''

இந்தமொழிபெயர்ப்பில் (1) 'பார்த்தன் மாதவனை அலங்காரஞ்செய்து பலியைத் திரியம்பகருக்காக நிவேதனஞ் செய்தான்', 'வாசுதேவருக்கு நிவேதனஞ்செய்யப்பட்ட பலியை முக்கண்ணரருகில் கண்டான்' என்றிருக்கிறது. வாசுதேவருக்கு—வாசுதேவரிடம். திரியம்பகருக்காக—திரியம்பகர் பொருட்டு. அர்ச்சுனன் கிருஷ்ணரிடம் சிவபூசை செய்தானென்பதே அதன் தாற்பரியம். கிருஷ்ணர் திருமேனியும் சிவபிரானார் அதில் ஆவாகிக்கப்பட்ட தேவதையுமாயினர் பார்த்தனுக்கு. 'அரியுஞ் சிவனும் ஒன்று' என்னும் உலகவழக்கு அதனாற் பொய்யாயிற்று.

(2), பார்த்தன் 'தன்னால் வாசுதேவருக்கு நிவேதனஞ் செய்யப்பட்ட பலியை முக்கண்ணரருகில் கண்டான்' என்றிருக்கிறது. கிருஷ்ணனது பாதத்திலிட்ட பூக்களைச் சிவனது முடியில் அவன் கண்டதாகச் சொல்லப்படவில்லை. அங்ஙனமாக, நம்மாழ்வார் தம் திருவாய்மொழி—அணைய வெனத்தொடங்கும் பத்தின் 6-ல், 'தீர்த்தனுலகளந்த சேவடிமேற் பூந்தாமஞ்—சேர்த்தி யவையே சிவன்முடிமேற் றான்கண்டு—பார்த்தன் றெளிந்தொழிந்த

பைந்துழா யான்பெருமை' எனப் பாடிப் பார்த்தன் உலகளந்தவன் சேவடியிற் சேர்த்த பூமாலையைச் சிவன்முடிமேற் கண்டதாகச் சொல்லுகிறார். அவ்வாழ்வார் வழக்கும் அதனுற் பொய்யாயிற்று.

அவ்வுலகவழக்கும் ஆழ்வார்வழக்கும் பொய்தானென்பதை வில்லிபுத்தூராரும் 'கண்ணன்மே லணிமல ரனைத்துங் காயெரி—வண்ணன்மேற் காண்டலு மகிழ்ந்து மேதினி—புண்ணுமா தவன்சிவ னுருவ மென்றுணர்ந்—தண்ணலு முடல்புள கரும்பி னனரோ'' என்று ஸ்திரப்படுத்துகிறார். மாதவன் சிவனுருவம், கண்ணன்மேல் எரிவண்ணன்மேல் என்பன முறையே காண்க.

(3) கிருஷ்ணரும் அர்ச்சுனனும் சேர்ந்து செய்த சிவஸ்தோத்திரங்கள் வந்தனம் வந்தனம் என்று போய்க்கொண்டிருக்கின்றன. வில்லிபுத்தூரர்மூலத்திற்கேற்பப் 'பொங்கரா', 'விண்ணிடை', 'தருவதும்', 'நித்தனே' முதலிய செய்யுட்களையும் அவற்றோடு முன்னும் பின்னும் இயைபுடைய சில செய்யுட்களையும் பாடியுள்ளார். ஸ்ரீமத் ஆறுமுக நாவலரவர்கள் பதிப்பித்த வில்லிபாரதத்தில் அச் செய்யுட்களெல்லாம் வரிசையாக வுள்ளன. ஆனால், வைஷ்ணவர் பதிப்பித்த சில பதிப்புக்களில் மூலத்துக்கு விரோதமாக அவை நீக்கப்பட்டுள்ளன. மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் சைவநூற் பரிசோதகராகிய சேற்றூர் ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்களும் தாம் வெளியிட்ட ஷைசங்கப்பதிப்பில் அவைகளைத் தனியடையாளமிட்டு 'இதற்குமுன்பதித்த அச்சுப்பிரதிகளிலுள்ளவைகள்' என்ற குறிப்புடன் சேர்த்துள்ளார்கள். இச்செயல் அச்சங்கத்தி லாதிக்கம்பெற்றுள்ள வைஷ்ணவப் புலவர்களை மகிழ்விக்கவே போலும். இப்பெயர்ப்பைக் கண்ட பிறகாயினும் துவேஷபுத்தியுள்ள வைஷ்ணவர்களும் அவர்களைத் திருப்திசெய்ய விரும்புஞ் சைவர்களும் தம்புத்தியைச் சீர்படுத்திச் சாத்திரப் புரட்டுச் செய்யாதிருப்பார்களாக.

---

# ருத்ரர் ஏன் மயானத்தில் வசிக்கிறார்?

(பாரதம் அநுசாஸன பர்வம் 207-வது அத்யாயத்தின் திரட்டு)

மனிதர்களின் ஸஞ்சார மில்லாமையால் மயானம் மிகப்பரிசுத்தமென்று நினைக்கப்பட்டது. பூதங்களை நான் (ஈசுவரர்) மயானத்தில் நிறுத்தினேன். அங்கிருந்துகொண்டு எல்லாப் பிராணிகளின் பயத்தையும் போக்குகிறேன். எனக்குப் பூதங்களை விட்டிருக்கப் பிரியமில்லை. ஆதலால், என் மனம் மயானத்திலிருப்பதில் விருப்பமுற்றிருக்கிறது. பரிசுத்தத்தை விரும்பும் பிராம்மணர்கள் மயானத்தை எப்போதும் பரிசுத்தமென்று சொல்லுகின்றனர். தவம் செய்கிறவர்களாலும் மோக்ஷத்தைக் கருதுகிறவர்களாலும் மயானம் எப்போதும் அடையப்படுகிறது. அது வீரர்களுடைய ஸ்தானமாயிருப்பதாலும் அதனை எனக்கு இடமாகச் செய்துகொண்டேன். உச்சிப்போதிலும் காலை மாலைகளிலும் ருத்ரரைத் தேவதையாக வுடைய (திருவாதிரை) நக்ஷத்திரத்திலும் தீர்க்காயுளை விரும்பு

றைவர் அசுத்தத்துடன் அங்கே போகக் கூடாதென்பது நிச்சயம். பூதங்களினுலுண்டான பயத்தைப் போக்குவதற்கு என்னைத்தவிர மற்றொருவனுல் முடியாது. நான் அங்கிருந்துகொண்டு ஒவ்வொருநாளும் ஜனங்களை யெல்லாம் காப்பாற்றுகிறேன். என்கட்டளையினுல் இங்குள்ள பூதங்களின் கூட்டங்கள் யாரையும் கொல்லுவதில்லை. உலகங்களின் நன்மைக்காக அந்தப்பூதங்களை நான் மயானத்தில் சந்தோஷப்படுத்திக்கொண் டிருக்கிறேன்.

(இங்ஙனமாகச், சில பிரேதங்கள் அப்பெருமானுரை மயானதேவதை யென்று நிந்திக்கின்றன. என்ன செய்யலாம்!)

"கோயில் சுடுகாடு கொல்புலித்தோ னல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்றனியன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான்றனிய னாயிடினுங்
காயி லுலகனைத் துங் கற்பொடிகாண் சாழலோ" திருவாசகம்.

---

# அந்தம் ஆதி.

கடவுள் செய்யுஞ் செயல்களுக்குக் கணக்கில்லை. அவை யெல்லாம் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என மூன்றுளடங்கும். ஒன்றைப் பலவாக விரிப்பது ஸ்ருஷ்டி. விரிவை நிலைப்பிப்பது ஸ்திதி. விரிவைச் சுருக்கி ஒன்றாக்குவது ஸம்ஹாரம். ஸ்ருஷ்டிப் பின்னரும் ஸ்திதி ஸமயத்திலும் பல தெய்வங்கள் கேட்கப்படும். அவற்றுட் கடவுளும் ஒன்றாகும். போலிப் பொருள்களும் உண்மைப் பொருளும் விரவிக்கிடப்பதற்கு ஏதுவாகிய ஸ்ருஷ்டி ஸ்திதிகள் உண்மைப் பொருளாகிய கடவுளை மட்டும் தனிப்படுத்திக் காட்ட எப்படி வலிபெறும்? ஸம்ஹாரத்தின் பின்னரோ தெய்வங்களின் பன்மை மறைந்துவிடும். எஞ்சி நிற்பது உண்மைக் கடவுளொன்றே. ஆகவே, ஸம்ஹாரமொன்றுதான் கடவுளைத் தனிப்படுத்திக் காட்டவல்லது. ஆகவின், கடவுளுக்குத் தொழில்பற்றி ஏற்படும் பெயர்களுள் ஸம்ஹாரம் பற்றிய பெயரும் அதன் பரியாயங்களுமே முதற்றரமானவை. அவைதான் ருத்ரன் என்பதும், சிவன், சங்கரன், சம்பு, ஹரன், ஈசுவரன், மஹாதேவன் முதலியனவுமாம்.

ஸர்வத்தின் ஸம்ஹாரத்துக்கும் பின் எஞ்சி நிற்பவர் சம்ஹார கர்த்தாவாயின் ஸ்ருஷ்டி செய்பவர் யாராகலாம்? அப்போது வேறுயாரும் இருக்க முடியாமையால் அவரேயாக வேண்டும். ஸ்திதிக்கும் அதுவே வழக்கு. இங்ஙனம், ஸம்ஹார கர்த்தாவே ஸ்ருஷ்டி ஸ்திதிகளுக்குங் கர்த்தாவாதல் யுக்திக்கும் ஒத்திருப்பது காண்க. ஆகவின், 'உலகிற்குக் கர்த்தா யார்?' என்னும் வினுவிற்குப் புத்திமான்கள் தரத்தக்கவிடை 'ஸ்ரீருத்ர மூர்த்தி' என்பதேயாம். சிவஞானபோதமும் 'அந்தம் ஆதி' யென்றது. ஸ்ரீபாஷ்யகாரரும் 'சங்கார கருத்தாவே முதற் கடவுள்' என அதற்குப் பொருள் வரைந்தருளினுர்கள்.

தி. மா. ஸ்ரீநிவாச ஐயங்கார்.

# சோமவார விரதம்.

(கண்டாச்சிபுரம், திரு. அ. முத்தைய பிள்ளை அவர்கள்.)

மக்கட் பிறவி வாய்க்கப்பெற்ற நாம் இம்மை மறுமை யின்பம் பெறுவான் இறைவனைப் போற்றும் நெறிகள் பலவுள. அவற்றுள், உபவாச மிருத்த லென்ப தொன்று. உபவாசம்—உண்ணுதொழிதல். விரதம் என்பது, புகங்கிருதி, தானம், விரதம், சிநேகம், நயபோசனம், கமை, உற்சாகம் என்னு மெழுவகைப் புண்ணியங்களு ளொன்று. பட்டினிகிடத்தலால் பாசமானது விலகிப் பதிநிலைப் பூட்டுகின்றது. உபவாசமிருக்கு மொருவன் அப் பசியினது வெம்மையைச் சகித்துக்கொண் டிருக்கிறு னாதலின், அவன்பால் பொறுமை விளங்குகின்றது. பட்டினிகிடந்து பசியினது கொடுமையை யறிந்தவன், பசியினால் வருந்தும் பிறஜீவர்களது துன்பத்தைத் தொலைப்பான். ஆகையால், அவனிடம் ஜீவகாருண்ய வொழுக்கம் அமைகிறது. ஜீவகாருண்யத்தா லன்றிக் கடவுளருளைப் பெற வியலா வென்பது வெளிப்படை. அவ் வருளைப் பெறுவான் உபவாசமிருத்தல் இன்றியமையாத தொன்றென்பது புலனும். இதனாலன்றோ,

> "வெண்டிரு நீறு புனையுமா தவர்க்கு
> விருந்துசெய் தறுபெரு மிடியும்
> கொண்டநல் விரதத் திளைத்தயாக் கையுமிக்
> கொடியனேற் கருள்நா ளுளதோ?"

எனத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் விரதத்தா லிளைத்த யாக்கையை வேண்டினர். அறுசுவை யுணவையே யுண்டு சுகிக்கும் விருப்புள்ளவன், சோம்பல் மிகுத்தவனாய் உலகவின்பமாகிய பாசத்திற் கட்டுண்டு இறைவனைக் கருதான். இதனை,

> "சோற்றிலே விருப்பஞ் சூழ்ந்திடி லொருவன்
> தோன்னுநற் றவமெலாஞ் சுருங்கி
> ஆற்றிலே கரைத்த புளியெனப் போம்."

எனக் கூறும் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் திருவாக்கா லறியலாம்.

> "அவனை யொழிய வமரரு மில்லை
> அவனன்றிச் செய்யு மருந்தவ மில்லை"

என்றபடி, தேவர்களுக்கெல்லாம் தேவனாஞ்சிவபெருமானைக் குறித்து அவனுக்குரித்தாம் வாரங்களிற் சிறந்த சோமநாளில் நோற்கும் விரதமே மிக்க சிறந்ததாமென வேதங்களும் விளம்பாநிற்கும்.

"உத்தம தேவர் தம்மு ளுத்தம னுரு மீசன்
உத்தம சத்தி மாரு ளுத்தமி யுருத்தி ராணி
உத்தம விரதந் தம்மு ளுத்தமந் திங்க ளென்பெ
ருத்தம மறைநூ லாதி யுரைக்குமிச் சோம வாரம்."

என்னும் பரஞ்சோதி முனிவர் திருவாக்கானும், "காருவிற் சந்தான நதியினிற் கங்கைவிரதத்தினிற் சோமவாரம்" என்னும் சதகச்செய்யுளானும் இச்சோமவார விரதமே சிறந்ததாமென வறிக. சிவபெருமான உமையம்மையாரோடு கூடுதலாற் சோமசுந்தரர் எனப் பெயர் பெறுவராதலின், அவர்க்குரிய வாரமாகிய திங்கட்கிழமைக்கும் சோமவாரமென்ப தாயிற்று. இவ்விரதத்தினது சிறப்பை விரித்துரைக்குமாற்றல் இச்சிறியேனுக் கில்லாததால் இஃதுடன் விடுத்து இவ்விரத நோற்கும் விதத்தைச் சிறிது விளம்புவாம்.

இவ்விரதம் உச்சிப்பொழுதிலே யுண்ணுதல், இரவிலே யுண்ணுதல், உணவொழிந்திருத்தல், உணவோடு உறக்கமு நீத்தல், ஊண்டுயிலொழிந்து நான்கு யாமமும் சிவபூசை யுஞற்றுதல் எனஐவகையாம். இவைமுறையே ஒன்றுக்கொன்றதிகமாகும். இவ்விரத நோற்போர் ஒருவருடம், இரண்டுவருடம், மூன்றுவருடம், வாழ்நாளெல்லையென ஓர்காலம் வரையறுத்துச் சங்கற்பித்து அக்காலவெல்லை முடிவிலே உத்தியாபனம் பண்ணக்கடவர். வாழ்நாளெல்லை வகுத்தார்க்கு இஃது இன்றாம்.

கார்த்திகை மாதத்திலேனும், மார்கழி மாதத்திலேனும், இரண்டமாவாசை வரும் மலமாதமொழிந்த மற்றை மாதங்களிலேனும் சோமவார விரதம் நோற்றல்வேண்டும். அமாவாசையோடு கூடிய சோமவாரம் அநேககோடி சிவராத்திரிக்குச் சமமாம். காசியாதி திவ்ய தலங்களிலிருந்து நோற்பதினும் அநேகமடங்கு மதுரையிலிருந்து நோற்றலானுண்டாம். ஆதிவாரத்திரவிலே உணவொழித்து தரையிற்கிடந்துறங்கி வைகறையெழுந்து கடவுளைத் துதித்து சௌசம் தந்தசுத்தியாதிய காலைக்கடன்களை முடித்து வாவியிற் சென்று திருநீறு, திலம், குசை, கோமயம், வில்வத்தடிமண் என்பவற்றைச் சிரசிலே யிட்டு, கையிற் பவித்திரம் புனைந்து சங்கற்பங் கூறி 'சோமசுந்தரக்கடவுளே! கங்கை, சிந்து, யமுனை, காவேரி, நருமதையாதி இவ்வுலகிலுள்ள புண்ணிய தீர்த்தங்களில் நீராடிய பலனை அடியேனுக்கீண் டருள்வீராக." என நீராடிக் கரைசென்று ஈரம் புலர்த்தித் தோய்த்துலர்ந்த வெள்ளாடை யுடுத்து, விபூதி யுருத்திராக்கம் விதிப்படி யணிந்து, பிராணாயாமஞ் செய்து சங்கற்பித்துப் புண்ணியாகம் பண்ணி, விரதத்திற்கோர் விக்கினமும் வாராதிருத்தற் பொருட்டு விநாயகனை முதலிற் பூசித்துப் பின், 'சோமசுந்தரேசா! நின் திருவருட்டுணைகொண்டு இச்சோமவார விரதத்தை யனுட்டிக்கின்றேன்." என விண்ணப்பித்துச் சிவபெருமானைத் துவாதசாந்தத்

திலே பளிங்குநிறமுடைத்தாம் வடகிழக்கு நோக்கிய ஈசானமுகத்தையும், பொன்னிறமாம் கிழக்குநோக்கிய தற்புருட முகத்தையும், கருநிறமாகிய தெற்குநோக்கிய அகோர முகத்தையும், செந்நிறத்தினதாம் வடதிசை நோக்கிய வாமதேவமுகத்தையும், வெண்ணிறமுடைய மேற்கு நோக்கிய சத்தியோசாத முகத்தையும், பதினைந்து திருக்கண்களையும், கங்கையும் மதியுந் தங்கிய அழகிய சடாமுடியினையும், சத்தி, அபயம், சூலம், கட்டுவாங்கம், தமருகம், வரதம், மாதுளம்பழம், சர்ப்பம், ஜெபமாலை, நீலோற்பலம் என்பன தாங்கிய பத்துத் திருக்கரங்களையும், இரண்டுதிருவடிகளையும், முப்பத்திரண் டிலக்கணமும் பதினாறு பிராயமு முடையவராகத் தியானித்துச் சிவலிங்கப் பெருமானை ஆசன மூர்த்திமூலம் பூசித்தல் வேண்டும். பிறகு,

"சுத்தஜல மபிடேக நல்லெண்ணெய் யரிசிமாத்
தூண்மஞ்ச ணெல்லி முள்ளி
தூபஞ்ச கௌவியமொ டாவினெய் பால்தயிர்
சுவையான பஞ்சா மிர்தம்
உற்றபலா மாக்கதலி மாதுளையு மெலுமிச்சை
யோங்குகம ழத்தை நார்த்தை
ஒண்கனிச் சுளைகுளஞ் சித்தேன் றிரட்டுபால்
உயர்கருப் பஞ்சா றுடன்
மெத்துமிள நீரன்னம் வில்வநீர் தபனநீர்
மிளிர்பொன் னிறத்தோ தகம்
மென்பசுங் கற்பூர நன்புனுகு சந்தனம்
விளங்குதா ராபி ஷேகம்."

என்ற அபிஷேகமுறைப்படி சிவலிங்கப் பெருமானுக்கபிஷேகித்துத் திருவொற்றுடை சாத்தி, சந்தனம், கஸ்தூரி, புழுகு, பச்சைக்கற்பூரம், குங்குமப்பூ, அட்சதை, அறுகு, வில்வம் முதலியன சாத்தி, வெண்பட் டாடைகளாலும், இரத்தினாபரணங்களாலும், வெண்மலர்களாலும் அலங்கரித்து, சிவ பஞ்சாக்கரத்தைப் பெண்பாலுக்கிசைய உச்சரித்து மேற்கண்டவாறே மீனாட்சி யம்மையாரையும் பூசைசெய்தல் வேண்டும். பின், அன்னம், கறி, பக்ஷணம், பானீயம் முதலியன நிவேதித்துத் தாம்பூலம் சமர்ப்பித்து தூபதீபஞ் சுற்றி, கண்ணாடி, குடை, சாமரம், வெண்புடவை, ஆலவட்டம் என்பன காட்டி வில்வத்தினாலே சகத்திர (1000) நாமார்ச்சனை புரிதல் வேண்டும்.

'புரகா னிச்சா ஞானக் கிரியையாய்ப் போந்த வில்வ
மாமுத லடைந்து மூன்று வைகலூண் உறக்க மின்றி
அரகா முழக்கஞ் செய்வோ ரைம்பெரும் பாத கங்கள்
விரகில்செய் கொலைகள் தீரு மாதலால் விசேடம் வில்வம்."

என்பதால் வில்வமே பத்திர புஷ்பங்களுட் சிறந்ததென விளங்கு கிறதாதலின், வில்வார்ச்சனை விசேடமாகக் கொள்ளப்பட்டது. அருச்சித்த பின், "அடியேன் அறிந்தும் அறியாமலும் செய்துள்ள குற்றங்க ளெல்லாவற்றையும் பொறுத்தருள்வாயாக! எனக்குஉய்யுநெறி காட்டுவீராக." எனப் பிரார்த்தித்து வலஞ்செய்து வணங்கிப் பின்னும் வேண்டிய வரங்களை வேண்டுக. இஃதொழிந்த மற்றைநேரங்களில் சிவபுராணங்கேட்டலும், சிவ பஞ்சாக்கரஞ் செபித்தலுமாயிருத்தல் வேண்டும். சிலர் உபவாசாதி விரதநாட்களில் பசிதோன்றுதவாறு சீட்டாடுதல், சூதாடுதல் முதலிய களியாட்டயர்கின்றனர். அந்தோ! இது குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொண்டதாயன்றோ முடியும்?

இவ்வாறு சோமவாரத் தன்று ஊணுமுறக்கமு நீத்து சித்தத்தைச் சிவன்பால் நிறுத்திப் பத்திபுரிந்து, மங்களவாரதினம் வைகறை யெழுந்து காலைக்கடன் முடித்து ஸ்நானஞ் செய்து, சிவபூசை விதிப்படி யியற்றி சிவப் பிராமணர்களுக்குத் தானங்கொடுத்து, ஆசாரியரை யவர் பத்தினியாரோடும் ஆசனத்திருத்தி அவர்களைச் சிவபெருமானும் உமாதேவியாருமாக மதித்து, ஆடையணி யாதிகளாலலங்கரித்து, பசு, பொன், பூமி முதலியன தத்தமக் கியன்றவளவு தானம் வழங்கிக் குருவினேவலினாலே சிவனடியார்களோடும் சுற்றத்தாரோடும் உணவருந்தல் வேண்டும். இவ்விரதத்தைப் பிரமன், விஷ்ணு, இந்திரன் முதலிய தேவர்களும், இருடிகளும், பிறரும் அநுட்டித்துக் கிடைத்தற்கரிய பேரின்பமுற்றன ரென்றால் நம்போலியர் இவ்விரதத்தைக் கட்டாயம் அநுட்டித்தல் வேண்டுமென்பதும், அதனால் சிவபெருமான் திருவருள் கைகூடுமென்பதும் நாம் சொல்லாமலே விளங்கும்.

பொதுவாக, விரதங்களுட் சிறந்ததும் தேவர்களுட் சிறந்த தேவனுஞ் சிவபெருமானுக் குரியவாரமுமாகிய சோமவாரத்திலே உபவாசமிருந்து இறைவனைப் பத்திர புஷ்பங்களுட் சிறந்த வில்வத்தினாலருச்சித்து மந்திரங்களுட் சிறந்த சிவபஞ்சாக்கர ஜெபம் செய்வோர், இம்மையில் நோயற்றவாழ்வும் குறைவற்ற செல்வமும் பெற்று, மறுமையில் மக்களடையும் பேறுகளுட் சிறந்த பேரின்ப முத்தி வாய்க்கப் பெறுவர்.

"ஈறுநோற் பவர்வெம் பகைமனத் துயர்தீர்ந்
தாயிரம் பிறவியி லியற்றுந்
தீதுசேர் வினைதீர்ந் தெடுத்தயாக் கையினிற்
சிவகதி சேர்வர்."

திருவிளையாடற்புராணம்.

———

உ

# ஹரதத்தர் மகிமை.

---

(திருவாளர் நல். கண்ணப்பமுதலியார் அவர்கள்.)

கஞ்சனூரிலே மதுசூதனாசாரி யென்னும் பாஞ்சராத்திரியாருக்கு ஓர் சுபுத்திரர் அவதரித்து சிவநேசத்தோடு வளர்ந்துவரும் அதிசயத்தைப் பாஞ்சராத்திரியா ருணர்ந்து உளம் வருந்தி யொருவாறு தெளிந்து அப்பிள்ளைக்குச் சுதரிசனாச்சாரி யென்னும் பெயர் புனைந்து பாஞ்சராத்திர கர்மங்களைச் செய்யத்தொடங்குகையில், அவர் தந்தையைநோக்கி, 'உம்மால் செய்விக்கப்படும் அவைதிக கருமங்கள் எமக்குடன்பாடில்லை, சிவபிரானருளிய வேத சிவாகமங்களே முக்கிய பிரமாணங்கள், அவற்றால் துணிந்துகூறப்படும் உண்மைப் பொருளாயுள்ளவர் சிவபெருமானே, அவரை யடையவரும் சன்மார்க்கம் சைவமே, அச்சமயத்தாற் பெறப்படும் சிவதீக்ஷை முதலியனவே முத்திசாதனம், இவ்வுண்மை முத்தி யடைபவர்கள் சிவனடியார்களே, இதுவே யென்னுடைய துணிபு. சர்வமங்கள குணாகரனாய் விளங்கும் ஹரன் என்னும் திவ்ய நாமத்தினையுடைய சிவபெருமானுக்கு நான் தத்தமாகிவிட்டேன். ஆகையால், என்னை இனி ஹரதத்தன் என்றுணரக்கடவாய்.' என்றுரைத்தருளி, விபூதி யுருத்திராக்கமாதி சைவமுத்திரைகளைத் தாங்கிக்கொண்டு சிவநேசர்திருவடிகளை ஆசிரயித்துச் சைவமார்க்கப் பிரசாரஞ் செய்துகொண்டிருந்தனர்.

பாஞ்சராத்திரி அருளை யதிகரித்தவராய் ஹரதத்தரை யடைந்து சில வேதவாக்கியங்களைக்கூறி நாராயணனே பரம்பொருள் என்று உபதேசிக்கப் புகுந்தகாலத்து, அவ்வாக்கியங்களையெல்லாம் ஒவ்வொன்றாகப் பூர்வபட்சஞ்செய்து சித்தாந்த வாக்கியங்களா லுண்மையைத் தெளிவு படுத்தி, சர்வஜனப்பிரசித்தியாய் அரசன் முதலியவர்களறிய அக்னி சம்ஸ்காரப்பட்ட இருப்புப் படிகளி லேறி,

"உயர்கா யத்திரிக் குரிப்பொரு ளாதலிற்
றசரதன் மதலை தாபித் தேத்தலிற்
கண்ணன் கயிலையி னண்ணியின் றிரப்பப்
புகழ்ச்சியி னமைந்த மகப்பே றுதவலிற்
றனது விழியுட னோராயிரங் கமலப்
புதுமலர் கொண்டரி பூசனை யாற்றலி
னங்கவற் கிரங்கி யாழியீந் தருடலி
னைங்கணைக் கிழவனை யழல்விருந் தாக்கலி
னமைப்பருங் கடுவிட மமுதுசெய் திடலிற்

றென்றிசைத் தலைவனைச் செகுத்துயிர் பருகலி
னவுணர் முப்புர மழியவில் வாங்கலிற்
றக்கன் வேள்வி தகர்த்தருள் செய்தலிற்
றனஞ்சயன் றனக்குத் தன்படை வழங்கலின்
மானிட மடங்கலை வலிதபக் கோறலின்
மாயோன் மகடூஉ வாகிய காலைத்
தடமுலை திளைத்துச் சாத்தனைத் தருதலின்
ஆழ்கடல் வரைப்பி னொன்றே ரனேக
ரன்புமீ தூர வருச்சனை யாற்றலி
னொன்கிரு செல்வமு மாங்கவர்க் கருடலி
னையிரு பிறப்பினு மரியருச் சித்தலி
னிருவரு மன்னமு மேனமு மாகி
யடிமுடி தேட வழற்பிழம் பாகலிற்
பிறப்பிறப் பாதி யுயிர்க்குண மின்மையிற்
கங்கைசூழ் கிடந்த காசிமால் வரைப்பிற்
பொய்புகல் வியாதன் கைதம் பித்தலின்
முப்புர மிறுப்புழி முகுந்தப் புத்தேள்
மால்விடை யாகி ஞாலமொடு தாங்கலி
னயன்சிர மாலை யளவில வணிதலின்
ஞானமும் வீடும் பேணினர்க் குதவலிற்
பசுபதிப் பெயரிய தனிமுதற் கடவு
ளும்பர்க ளெவர்க்கு முயர்ந்தோ
னென்பது தெளிக வியல்புணர்ந் தோரே."

என்னும் கருத்துகளடங்கிய சுலோகங்களைக் கூறி ஒவ்வொரு படியிலிருந்து கொண்டு ஒவ்வொருவிஷயமாக வாதித்து ஒருவருந் தம்மெதிர் நின்று வாய்திறப்பதற் கிடமில்லாமல் எல்லாரையும்வென்று அனற்பரிசத்தால் செந்நிறந்தோய்ந்து விளங்கும் அப்படிகளி னுச்சியிலிருந்துகொண்டு ஹரதத்த சஹஸ்ரம் என்னும் கிரந்தமொன் றியற்றி ஆயிரங் கக்ஷிகளால் தமது சித்தாந்தத்தை நாட்டித் தம்மையுட்பட எல்லாரையுந் திருத்தி யாவர்க்குஞ் சிவதீக்ஷை செய்து சன்மார்க்கத்தி லுய்வித்தபிரபாவம் ஸ்ரீமத் அப்பைய தீக்ஷிதசுவாமிகளருளிய ஹரதத்த மான்மிய மென்னுங் கிரந்தத்தா லினிது பெறப்படும். இவரைத் திருநந்திதேவர் அவதாரமென்று சிவரஹஸ்யமாதி கிரந்தங்கள் கூறும். இவரால் செய்யப்பட்ட நூல்கள் சதுர்வேதசாரம், தத்வநிரூபணம், ஹரிஹரதாரதம்மியம், ஸ்ரீகண்டபாஷ்ய சமர்த்தனம், உஜ்வலம்என்கிற ஆபஸ்தம்ப சூத்திரபாஷ்யம், ஞாநரத்நாகரம், சிவாதிக்ய சிகாமணி, பக்தாதிக்ய சிகாமணி, சைவாகமபூஷணம், விபூதி பஞ்சகம், ருத்திராக்ஷபஞ்சகம் முதலியனவாம்.

———

# கொலையுமா தெய்வ வணக்கம்?

காடன், மாடன், காட்டேறி, காளியம்மன், எட்டியம்மன், செல்லம்மன் முதலிய சிறுதெய்வங்களை வணங்குகின்ற பெரியோர்களே!

கொலை, களவு, கள், காமம், பொய் என்னும் ஐந்தும் பஞ்சமகாபாதகங்கள் எனப்படும். இவைகளை முழுவதும் விலக்கவேண்டியதே மக்களுக்கு முக்கியகடமை. இவைகளில் ஒன்றாயினும் மக்களிடம் இருக்குமானால் அவர்களுக்கு நற்கதி இல்லவே யில்லை.

அப்படியிருக்க, அப்பாதகங்களில் முதன்மையான கொலைத்தொழிலால் நீங்கள் அச்சிறுதெய்வங்களை வழிபடுகின்றீர்கள். உங்கள் கையில் அகப்பட்டுச் சாகும் ஆடு, கோழி முதலிய் ஏழைப்பிராணிகளுக்குக் கணக்கில்லை. கொலைத்தொழிலால் அத் தெய்வங்கள் திருப்தி அடைகின்றன என்று நீங்கள் எண்ணுவதே அதற்குக் காரணம். இப்படியும் எண்ணலாமா? அத்தெய்வங்கள் யார்? அவைகள் சர்வலோக சரண்யனாகிய சாக்ஷாத் சிவபிரானது ஆணைக்கு அடங்கி நடக்கும் அடிமைகளே. தங்களைநோக்கி மக்கள் செய்கின்ற வணக்கத்தையெல்லாம் அவைகள் தேவனாகிய சிவமூர்த்திக்கே அர்ப்பணஞ் செய்துவிடும். சர்வலோகமும் வணங்கத்தக்க முழுமுதற் கடவுள் அவன் ஒருவனே யன்றோ? ஆகையால், அவன் எவ்விதமான வணக்கத்தை விரும்புகின்றானோ அவ்விதமான வணக்கத்தையே அவன் அடிமைகளாகிய சிறுதெய்வங்களும் விரும்பும். 'மந்திர எழுத்து ஐந்து ஓதி பச்சிலை மலர் ஏதேனும், சிந்தைகூர் அன்பிற் சாத்தித்தொழுவதே சிவனுக்கு இன்பம்'. இன்னும் அவன் "கொல்லாவிரதமே மேலான அறம்' என்று கட்டளையிடுகின்றான். இவ்வாறு அன்பு கலந்து பத்திர புஷ்பங்களாற் செய்யும் வழிபாட்டையே அந்த ஆண்டவன் இன்பமாக ஏற்றுக் கொள்ளும்போது அவன் தயவில் வாழும் சிறு தெய்வங்கள் மட்டும் கொலை வணக்கத்தால் திருப்தி அடைகின்றனவென்று எண்ணலாமா? அவைகள் மனிதர்களைக்காட்டிலும் மிகவும் அறிவுடையவைகள். சிவ கோபத்துக்கு அஞ்சி நடுங்கும். 'கொல்லாவிரதமே மேலான அறம்' என்னும் அவன் வாக்கை இமைப்பொழுதாயினும் மறந்துவிடா. ஆகையால், அப்பெருமானது விருப்பத்துக்கிசைய அவைகளும் அன்புகலந்த பத்திரபுஷ்ப வணக்கத்தால் மட்டுமே திருப்தியடைகின்றன என்பது சத்தியம்.

இனி, நீங்கள் கண்டகண்ட தெய்வங்களை யெல்லாம் வணங்குவதற்குக் காரணம் உங்களைக்காட்டிலும் வலிய அவைகள் எளிய உங்கள்மேல் கிருபைவைக்கவேண்டு மென்பதேயன்றோ? அப்படியானால், வலிய நீங்கள் உங்களைக்காட்டிலும் எளிய ஆடு, கோழி முதலிய பிராணிகளைச் சிறிதுங் கிருபையின்றி ஏன் அடுகொலை, படுகொலை, அதிபாதகக் கொலை செய்யவேண்டும்? கொலையைச் செய்து இரக்கத்தைச் சம்பாதிக்க எண்ணுவதும் விஷத்தைத் தின்று உயிர் வாழ எண்ணுவதும் ஒன்றே. நெல்லைவிதைத்தால் நெல்தான்விளையும்; கொள் விளையாது. தினையை விதைத்தால் தினைதான் விளையும்; பனை விளையாது. அப்படியே கொலையை விதைத்தால் கொலைதான் விளையும்; கிருபையாவது இரக்கம்விளையாது. ஆகையால், நீங்கள்வணங்குந்தெய்வம் இரக்கமுள்ளதாயிருந்தால், உங்கள் கொலை வணக்கத்தைக் கண்டு சகிக்கமாட்டாமல் ஓடிவிடும். பாதகத் தெய்வமாயிருந்தால் அதனிடத்திலும் இரக்கமென்பது இராது. ஆகவே, எப்படிப் பார்த்தாலும் உங்கள் வணக்கம் மலட்டுப் பசுவைக் கறந்த கதையாய்த்தான் முடியும்.

அன்பர்களே! கொலைப்பாவம் கொடிது, கொடிது, அறக்கொடிது. நீதியைச் சிறிதுங் கவனியாமல் ஏழைப்பிராணிகளைக் கொண்டுபோய் நிறுத்திக் கத்தியை ஓங்குகின்றீர்களே. உங்கள் கை நடுங்கவில்லையா? அவை அங்குமிங்கும் திரும்பித்திரும்பி விழிப்பதைப் பார்க்கிறீர்களே; உங்கள் கண் கலங்கவில்லையா? அம்மா! அம்மா! என அலற அலற வெட்டி வீழ்த்துகின்றீர்களே; அப்போது உடல் கால்களை உதறி உதறித் துடிக்கின்றதே; அப்போதாயினும் உங்கள் நெஞ்சு ஐயோ! என உருகவில்லையா? இப்படிப்பட்ட உங்களுக்குத் தெய்வங் கிருபைசெய்யும் என்பதைக் காட்டிலுந் தெய்வதூஷணை வேறில்லை. சர்வசங்காரனாகிய சங்கரன் உங்கள் கொலைப் பாவத்திற்காக உங்களை மறு உலகத்தில் செக்கிலிட்டு ஆட்டும்போது, கண்ணிரண்டிலும் ஊசியையிறக்கும்போது, அக்கினிக்குழியில் அமுக்கும்போது அத்தெய்வங்களெல்லாம் உங்களை விட்டுவிடும். நீங்களே அகப்பட்டுக்கொள்ளுவீர்கள். ஆகையால், கொலையுந் தெய்வ வணக்கம் என்பதை விட்டு விடுங்கள். அன்புகலந்த, இரக்கங்கலந்த, சிவாக்ஞையை மீறாத நல்ல ஆசார பூசையைச் செய்யுங்கள். நீங்களும் உங்கள் பெண்டுபிள்ளைகளும் இன்பவாழ்வைப் பெறுவீர்கள். சிவசங்கரன் உங்களுக்குச் சுபத்தை யருள்வானாக!

"கொல்லா விரதங் குவலயமெல் லாமோங்க
எல்லார்க்குஞ் சொல்லுவதென் னிச்சை பராபரமே!"

கா. ராஜமாணிக்கப் பிள்ளை.